**உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்டம் (புற நெகும) - 2019**

உள்ளூராட்சி விரிவாக்கல் துறைச் செயற்திட்டத்தின் (புற நெகும) 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 ஒக்தோபர் 21 ஆம் திகதிய 2790–எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) மற்றும் 2016 நவம்பர் 02 ஆம் திகதிய 3431–எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், உள்ளக மற்றும் உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் 07 மாகாணங்களின் மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. கணக்களிப்பொறுப்பு, நிதிசார் மற்றும் தொழில்நுட்பரீதியாக பலப்படுத்தப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளினூடாக செயற்திட்டத்தின் முன்னேற்றப்பட்ட உள்ளூராட்சி உட்கட்டமைப்பு செயற்படுத்தல்கள் மற்றும் பயனுறுதிமிக்க சேவை விநியோகம் என்பவற்றை அடைதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். நாட்பட்ட நோய்களினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் 07 மாகாணங்களின் அபிவிருத்தி குறைந்த பிரதேசங்களிலுள்ள உள்ளூராட்சி அதிகாரசபைகள் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் வழங்கப்படும் உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளினை முன்னேற்றுவதற்கு செயற்திட்டத்தின் குறைநிரப்பு கடன்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. ஆகையால், நீர் வழங்கல் முறைமைகள், உட்கட்டமைப்பு அடிப்படை சேவை விநியோக உள்ளூராட்சி அடிப்படை கொள்கை சீர்திருத்தங்கள் மற்றும் இயலளவுகளை வலுப்படுத்துதல் என்பவற்றை முன்னேற்றுதல் தொடர்பான சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன. 2790-எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 8,940 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 68.80 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 7,670 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 59 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. ஐ.அ.டொலர் 19.8 ஆன மதிப்பிடப்பட்ட மிகுதி கிரயம் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்டது. 3431 எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க குறைநிரப்பு கடன் உடன்படிக்கையின் பிரகாரம் ஆரம்பச் செயற்திட்டத்தின் செயலாற்றலை நன்றாக உயர்த்துவதற்கு 2017 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 60 மில்லியன் மேலதிகக் கடன் பெறப்பட்டிருந்தது. இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்புடன் மதிப்பிடப்பட்ட செயற்திட்டக் கிரயம் ஐ.அ.டொலர் 67.8 மில்லியனாகும். செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட செயற்பாடுகளின் பூர்த்தியாக்கல் திகதி 2021 திசெம்பர் 31 வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| 2019 மார்ச் 15 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 6.1 ஆம் பந்தி | செயற்திட்டப் பதவியணியினர் குறுகிய கால பயிற்சியொன்றுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டப் பணிப்பாளர், பிரதி செயற்திட்டப் பணிப்பாளர் மற்றும் சிரேஷ்ட பொறியியலாளர் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட வெளிநாட்டு பயிற்சி திட்டங்களில் பங்குபற்றியிருந்தனர்.<br><br>மேலும் செயற்திட்ட வழிகாட்டல் குழு செயற்திட்டத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு இது அவசியமாகவுள்ளது எனும் அடிப்படையில் இப் பயிற்சித்திட்டத்தை பரிந்துரைத்திருக்கலாம். செயற்திட்டப் பதவியணியினர் மற்றும் அமைச்சுப் பதவியணியினர் கண்காணிப்புக் குழுவின் பரிந்துரையின்றி வெளிநாட்டு பயிற்சியில் | செயற்திட்டப் பதவியணியிலுள்ள ஏனைய உறுப்பினர்களுக்கான வாய்ப்புக்கள் இழக்கப்பட்டிருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தலுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | |
| 2019 மார்ச் 15 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 6.2 ஆம் பந்தி | செயற்திட்ட தேவைகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்தல் கடுமையானதாக இருக்க வேண்டிய போதிலும் வெளிநாட்டுப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்ட அமைச்சின் பதவியணியினர் செயற்திட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்கான குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டப் பதவியணியினர் கடமையை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய பதவியணியினரைத் தெரிவு செய்தல் அமைச்சால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தலுடன் இணங்குதல் வேண்டும். |
| 2019 மார்ச் 15 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றிக்கையின் 9.3 ஆம் பந்தி | செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் கூட்டங்கள் 02 மாதங்களுக்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டிய போதிலும் 03 கூட்டங்கள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருந்தன. | செயற்திட்ட நடவடிக்கைகளை கண்காணித்தல் வினைத்திறனாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் கூட்டங்கள் சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடாத்தப்பட வேண்டும். |
| பிஎஸ்/1/1/16/1 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கை | ஒவ்வொரு பங்குபற்றுநராலும் வெளிநாட்டுப் பயிற்சியின் பின்னர் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மேற்படி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்கான குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | சில பங்குபற்றுநர்களால் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை அறிவுறுத்தலுடன் இணங்குதல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

செயற்திட்ட அமுல்ப்படுத்தல் திட்டங்களின் பிரகாரம், 07 மாகாணங்களின் உட்கட்டமைப்பு தேவைப்பாடுகளினை முன்னேற்றுவதற்கு அவற்றின் 105 உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு செயற்திட்டம் உதவியளித்திருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் 178 உள்ளூராட்சி அதிகாரசபைகளின் உரிய அபிவிருத்தி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மேலும் குறைநிரப்பு கடன் வசதிகளின் கீழ் 29 உள்ளூராட்சி அதிகாரசபைகளில் 29 நீர் வழங்கல் செயற்திட்டங்களையும் 35 நிர்மாண வேலைகளையும் மேற்கொள்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன் அதில் 04 நீர் வழங்கல் செயற்திட்டங்கள் முன்னைய ஆண்டின் இறுதியில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. 03 நீர் வழங்கல் செயற்திட்டங்கள் மற்றும் 11 உட்கட்டமைப்பு செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அத்தகைய செயற்திட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் தொடர்பான விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| இல. | செயற்பாடுகள் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக செயலாற்றல் | | தாமதங்கள் மாதங்களில் | தாக்கம் | முகாமைத்துவக் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்டது | அடைந்து கொள்ளப்பட்டது | | | | |
| | | % | % | | | | |
| | **நீர் வழங்கல் உப செயற்திட்டங்கள்** | | | | | | |
| (அ) | மின்னேரியா நீர் சுத்திகரிப்புப் பொறி முன்னேற்ற செயற்திட்டம் | 100 | 80 | 30 | (அ) கிரய மதிப்பீடுகளின் மிகையான ஓட்டம்<br>(ஆ) எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் குறித்துரைக்கப்பட்ட தரப்பினர்களால் பெறப்பட்டிருக்கவில்லை. | தேசிய வழிகாட்டல் குழுவின் அங்கீகாரத்துடன் 80% செயன்முன்னேற்றத்தில் தொழில்நுட்ப காரணங்களுக்காகவும் தனியான ஒப்பந்தமாக மேற்கொள்ளப்பட்டிருந்த மிகுதி வேலை விளம்பரத்தை பூர்த்தி செய்வதன் | தேவையான தர மட்டத்தை முறையாக உறுதிப்படுத்தும் சிவில் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தகாரருக்கு தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு செயற்திட்டம் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காரணமாகவும் பரஸ்பரம் முடிவுறுத்தப்பட்டது. | தேவைப்படுகின்றது. |
| (ஆ) | நுவரவெவ நீர் சுத்திகரிப்பு பொறியின் இயலளவு முன்னேற்றம் | 77 | 55 | 03 | (அ) கிரய மதிப்பீடுகளின் மிகையான ஒட்டம்<br>(ஆ) எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் குறித்துரைக்கப்பட்ட தரப்பினர்களால் பெறப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்ததாரரின் திரவத்தன்மை பிரச்சினை பிரதானமாக நலிவான செயலாற்றல் | தேவையான தர மட்டத்தை முறையாக உறுதிப்படுத்தும் சிவில் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரருக்கு தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு செயற்திட்டம் தேவைப்படுகின்றது. |
| (இ) | செவகம கால்வாய் 3 பகுதிக்கான நீர் குழாய்வரிசைகளை விரிவுபடுத்துதல் மற்றும் செவகம நீர் கோபுரம் வரை பிரதான விரிவாக்கத்தை மாற்றுதல் | 94 | 73 | 17 | - மேற்படி - | DI குழாய்களை இறக்குமதி செய்வதில் தாமதம் | - மேற்படி - |
| (ஈ) | நிக்கவெரட்டியவில் நீர் வழங்கல் திட்ட விரிவாக்கம் | 85 | 75 | 17 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - |
| | **சிலில் நிர்மாண வேலைகள்** | | | | | | |
| (உ) | குருநாகல்லில் புதிய பலநோக்கு | 75 | 75 | 03 | - மேற்படி - | மண் அனுமதிப்பத்திரங்கள் | - மேற்படி - |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | கட்டிடத்தை நிர்மாணித்தல் | | | | | காரணமாக ஆரம்ப தாமதம் | |
| (ஊ) | நரம்மல பிரதேச சபை அலுவலக கட்டிட நிர்மாணம் | 100 | 65 | 05 | - மேற்படி - | காசுப்பாய்ச்சல் காரணமாக ஒப்பந்ததாரரின் நலிவான செயலாற்றல் | - மேற்படி - |
| (எ) | பொல்காவலவில் புதிய சந்தைத் தொகுதி நிர்மாணம் | 100 | 80 | 06 | - மேற்படி - | காசுப்பாய்ச்சல் காரணமாக ஒப்பந்ததாரரின் நலிவான செயலாற்றல் | - மேற்படி - |
| (ஏ) | குருசவத்த குடிநீர் வழங்கல் செயற்திட்டம் | 36 | 36 | 04 | (அ) கிரய மதிப்பீடுகளின் மிகையான ஒட்டம்<br>(ஆ) எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் குறித்துரைக்கப்பட்ட தரப்பினர்களால் பெறப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை | தேவையான தர மட்டத்தை முறையாக உறுதிப்படுத்தும் சிவில் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரருக்கு தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு செயற்திட்டம் தேவைப்படுகின்றது. |
| (ஐ) | மாத்தளை பிரதேச சபைக்கான மகப்பேற்று மற்றும் சுகாதார பராமரிப்பு நிலைய மற்றும் சனசமூக மண்டப நிர்மாணம் | 93 | 84 | 06 | - மேற்படி - | கருத்துரை வழங்கப்படவில்லை | - மேற்படி - |
| (ஒ) | குறுகுத்தலவில் மகப்பேற்றுப் | 100 | 81 | 05 | - மேற்படி - | அமைவிடம் மிகவும் சிக்கலான | - மேற்படி - |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | பராமரிப்பு நிலைய நிர்மாணம் | | | | | நிலப்பரப்பொன்றில் காணப்படுதல். | |
| (ஓ) | கதிரண கலையரங்க நிர்மாணம் | 85 | 65 | 06 | - மேற்படி - | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தால் மண் புலனாய்வுகளின் போது மேற்கொள்ளப்பட்ட தவறொன்றின் காரணமாக அடித்தளம் மீள வடிவமைக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஔ) | மஹபகே சந்தையுடன் பலநோக்கு கட்டிடத்தை நிர்மாணித்தல் | 95 | 91 | 10 | - மேற்படி - | தீந்தை பூசுதல் பொருத்துக்களை நிறுவுதல் தவிர எல்லா வேலைகளும் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. | - மேற்படி |

### 3.2 செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதிலுள்ள தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல. | செயற்பாடுகள் | ஆரம்பித்த திகதி | தாமதங்கள் மாதங்களில் | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | களவெவ சுத்திகரிப்பு பொறியின் மேம்படுத்தல் | 2019 மார்ச் 15 | 24 | (அ) பூர்த்தி செய்வதிலுள்ள தாமதங்கள்<br>(ஆ) கிரய மதிப்பீடுகளின் மிகையான ஓட்டம் | கருத்துரை வழங்கப்படவில்லை. | ஒப்பந்தக் கிரயங்கள் அதிகரிக்கும் சாத்தியம் மற்றும் தேவையற்ற கால நீடிப்புக்கள் என்பன தவிர்க்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | (இ) எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் குறித்துரைக்கப்பட்ட தரப்பினர்களால் பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கெபித்திகொல்லெவ நீர் வழங்கல் திட்டம் | 2019 செப்தெம்பர் 19 | 28 | -மேற்படி- | கருத்துரை வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| (இ) | தம்புள்ள கிராமப் பகுதி மற்றும் கந்தலமவிற்கான நீர் வழங்கல் விரிவாக்கம் | 2019 பெப்ரவரி 28 | 22 | -மேற்படி- | கருத்துரை வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| (ஈ) | இனமலுவ மற்றும் கிதுல்ஹிற்றியாவவிற்கான நீர் வழங்கல் விரிவாக்க நிர்மாணம் | 2019 சனவரி 02 | 21 | -மேற்படி- | கருத்துரை வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| (உ) | சிகிரியா மற்றும் ஹபரண பகுதிகளிற்கான நீர் வழங்கல் விரிவாக்க நிர்மாணம் | 2019 சனவரி 02 | 21 | -மேற்படி- | கருத்துரை வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| (ஊ) | பதலயாய மற்றும் பெலகன்வெவவில் விநியோக வலையமைப்பை வழங்கி அமைத்தல் | 2019 சனவரி 17 | 21 | (அ) பூர்த்தி செய்வதிலுள்ள தாமதங்கள்<br>(ஆ) கிரய மதிப்பீடுகளின் மிகையான ஓட்டம்<br>(இ) எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் குறித்துரைக்கப்பட்ட தரப்பினர்களால் பெறப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | ஒப்பந்தக் கிரயங்கள் அதிகரிக்கும் சாத்தியம் மற்றும் தேவையற்ற கால நீடிப்புக்கள் என்பன தவிர்க்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (எ) | பதலயாய மற்றும் பெலகன்வெவ சுத்திகரிப்பு பொறி | 2019 சனவரி 17 | 21 | -மேற்படி- | கேள்வி மதிப்பீட்டுச் செயன்முறையை அமுல்ப்படுத்துவதில் உள்ள தாமதங்கள் | -மேற்படி- |
| (ஏ) | மதுரங்குளியவில் பலநோக்குக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | 2019 சனவரி 27 | 21 | -மேற்படி- | கருத்துரை வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| (ஐ) | கெகுனதுர உப நகரத்தின் முன்னேற்றம் | 2019 மார்ச் 08 | 23 | -மேற்படி- | அமைச்சரவை அங்கீகாரத்திற்காக காத்திருத்தல் | -மேற்படி- |
| (ஒ) | மயான நிர்மாணம் | 2019 மார்ச் 01 | 23 | -மேற்படி- | கருத்துரை வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| (ஓ) | பொதுச் சந்தை நிர்மாணம் | 2019 மார்ச் 11 | 23 | -மேற்படி- | ADB ஒத்திசைவிற்காக காத்திருத்தல் | -மேற்படி- |

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல. | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்ததாரரிடமிருந்து ரூபா 1.78 மில்லியன் தொகையான தாமதக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு செயலாற்றல் பிணைமுறி உரிய காலத்தில் | காலாவதித் திகதிக்கு முன்னர் செயலாற்றல் பிணைமுறி காசாக்கப்படாததன் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 1.8 மில்லியன் நட்டமேற்பட்டிருந்தது. | பொழிப்பொன்றாக செயற்திட்டத்திற்கு ரூபா 1,789,776.22 கூட்டுமொத்தம் ஒப்பந்ததாரரால் திருப்பி செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன் வடிவமைப்பின் முறையற்ற | பொறுப்பற்ற அதிகாரிகளிற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | காசாக்கப்பட்டிருக்கவில்லை. | | மேற்பார்வை மற்றும் மதியுரையாளரின் மேற்பார்வையின் கீழ் ஒப்பந்ததாரரால் ஆற்றப்பட்ட உப நியமத்தர வேலைகளாக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய நிரந்தர குறைபாடுகளின் குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையும் காணப்படுகின்றது. தற்போது இந்த நிரந்தரக் குறைபாடுகளை மாத்திரமே மேலதிக கிரயத்துடன் வேலையை மீள மேற்கொண்டு சீர்செய்ய முடியும். | |
| (ஆ) | உடபலத பிரதேச சபையானது நிர்மாணத்தில் குறைபாடுகள் காணப்பட்டதன் காரணமாக நீர் வழங்கல் திட்டத்தை கையேற்பதை நிராகரித்திருந்தது. அதே ஒப்பந்ததாரரிற்கு ரூபா 9.3 மில்லியன் கிரயத்தில் குறைபாடுகளை சீர்செய்வதற்காக தொடர்ச்சியான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதிலும் வேலைகள் தற்போது வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட அதிகாரிகளின் கவனயீனம் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 9.3 மில்லியன் தொகையான நட்டமேற்பட்டிருந்ததுடன் குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொதுமக்களிற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கவனக்குறைவாக வேலையிலீடுபட்ட மதியுரையாளர்கள் மற்றும் செயற்திட்ட உத்தியோகத்தர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | புறநெகுமவின் கீழ் உடபலத, உடுதும்பர மற்றும் வில்கமுவ பிரதேச சபைகளிலுள்ள ரூபா 282.36 மில்லியன் கிரயத்தினாலான மூன்று நீர் | செயற்திட்ட அதிகாரிகளின் கவனயீனம் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 102 மில்லியன் தொகையான நட்டமேற்பட்டிருந்ததுடன் | கருத்துரை வழங்கப்படவில்லை. | கவனக்குறைவாக ஈடுபட்ட மதியுரையாளர்கள் மற்றும் செயற்திட்ட உத்தியோகத்தர்களிற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | வழங்கல் திட்டங்கள் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தன. அச் செயற்திட்டங்களின் குறைபாடுகளை சீர்செய்வதற்காக மேலதிக நிதியளிப்பின் கீழ் ரூபா 102 மில்லியன் கிரயத்தில் புதிய ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொதுமக்களிற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | | எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு இப்பகமுவ நீர் வழங்கல் திட்டத்தை கையளித்த பின்னர் நான்கு இடங்களில் நான்கு சந்தர்ப்பங்களில் குழாய் வெடிப்பு ஏற்பட்டிருந்தது. | குறைபாட்டு பொறுப்புக் காலப்பகுதி முடிவடைந்த பின்னர் ஏதாவது குறைபாடு ஏற்படும் விடயத்தில் அரசாங்கத்திற்கு மேலதிக சுமையொன்று காணப்படும். | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அதிகாரிகள் மற்றும் மதியுரை அதிகாரிகளின் முன்னிலையிலேயே 2019.11.08 இல் அமுக்கப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து சான்றிதழ் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | இப்பகமுவ நீர் வழங்கல் திட்டக் குறைபாடுகள் சீர் செய்யப்பட்ட பின்னர் என்டபிள்யூஎஸ்டிபீ இன் அதிகாரிகளின் முன்னிலை இல்லாமல் அமுக்கப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | கலேவெல தித்தவெல்கொல்ல நீர் வழங்கல் விரிவாக்கல் ஒப்பந்தத்திற்காக புதிய 110 மில்லிமீற்றர் பிவீசீ குழாய்களை பயன்படுத்துவதற்கு ஒப்பந்ததாரர் அனுமதித்திருந்தா்ர். பௌதீக மெய்மையாய்வின் போது இவ் ஒப்பந்தத்திற்காக | குறைந்தகால நீடிப்புத்தன்மை காரணமாக உரிய விளைவுகள் அடையப்பட்டிருக்கவில்லை. | சேதமடைந்து நிறம் மறைந்து போயிருந்த பிவீசீ குழாய்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என மதியுரையாளர் கூறியிருந்தார். | சேதமடைந்த குழாய்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பயன்படுத்துவதற்கு வேலைத்தளம் ஒன்றில் களஞ்சியப்படுத்தப்பட்ட 1314 எண்ணிக்கையான 110 மில்லிமீற்றர் பிவீசீ குழாய்கள் சேதமடைந்து நிறம் மறைந்து போயிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் இவ் இருப்புக்களில் 186 எண்ணிக்கையான குழாய்கள் அமைத்தலிற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. | | | |
| (எ) | தென் மாகாணத்தில் வேலைகளில் ஈடுபட்ட மதியுரை நிறுவனத்தால் வேலைக்கு ஈடுபடுத்தப்பட்ட நிபுணர் பதவிகளிற்கான முக்கிய பதவி நிலைகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன் 10 செயற்திட்டங்களில் 07 செயற்திட்டங்களின் கீழ் கருத்தியல் வரைபடங்கள், விபரமான கட்டிடக்கலை வரைபடங்கள், விபரமான கட்டமைப்பு ரீதியான வரைபடங்கள், விபரமான சேவை வரைபடங்கள், வேலைகள் மற்றும் மூலப்பொருட்களிற்கான குறிப்புரைகளை தயாரித்தல், நிதிசார் சுற்றாடல் மற்றும் சமூக அறிக்கைகளை தயாரித்தல் போன்றன தொடர்பான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகள் தாமதங்களுடன் பூர்த்தி செய்யப்படும். | ADB ஒத்திசைவு செயற்திட்டத்தால் பேணப்பட்ட நல்லுறவை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்டிருந்தது. | குழுத் தலைவரிற்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக மதியுரை நிறுவனத்திற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் (03 ஆம் பிரிவு) பிரகாரம் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு முன்பு திட்ட அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வது கட்டிட அனுமதிப்பத்திரமொன்றிற்கு தேவையாகவுள்ள போதிலும் கெலிஓயா பொதுச் சந்தை மற்றும் கார் நிறுத்துமிடம் மற்றும் உடுநுவர பிரதேச சபையின் குறுக்குத்தல மகப்பேற்று மற்றும் குழந்தை பராமரிப்பு சிகிச்சை நிலையம் என்பவற்றிற்காக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | ஆகக் குறைந்த தேவைப்பாடுகள் மற்றும் நகரத்தின் பொது அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு நிர்மாணம் பொருத்தமில்லாமல் இருக்கலாம். | கருத்துரை வழங்கப்படவில்லை. | விதிகளுடன் இணங்குதல் வேண்டும். |

**3.4 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைப்பயன்பாடுடைய வளங்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(I) உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கான IT தீர்வுகள்**

| **விளைவற்ற சொத்துக்கள்** | **தாக்கம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|
| செயற்திட்டத்தால் 137 பிரதேச சபைகளிற்காக வன்பொருளுடன் "Front Office System" ஆக அறியப்பட்ட IT தீர்வுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட Front Office System இற்கு துணைபுரிவதற்கு back office system காணப்படாததன் காரணமாக குறித்துரைக்கப்பட்ட நோக்கத்தை | உள்ளூராட்சி அதிகாரசபைகளின் தகவல்கள் தொடர்பான முறைமை இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக பிரதேசத்தில் வாழுகின்ற மக்களிற்கு உரிய நன்மைகள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | முறைமையை அபிவிருத்தி செய்வதற்கு உத்தியோகத்தர்களின் செல்வாக்கை பெற்றுக்கொள்வது செயற்திட்டத்திற்கு அவசியமாகும். | செயற்திட்ட நடவடிக்கைகளின் அமுல்ப்படுத்தல் தொடர்பான பொறுப்புக்கள் மாகாண செயற்திட்டப் பணிப்பாளரிற்கு ஒதுக்கப்பட வேண்டும். |

அடைந்துகொள்ள முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மத்திய மாகாணம் மற்றும் வட மத்திய மாகாணத்தில் காணப்படக்கூடிய 41 உள்ளூராட்சி நிறுவனங்களில் 17 பிரதேச சபைகள் மேற்படி முறைமையை (system) முழுமையாக நடைமுறைப்படுத்தியிருக்காததுடன் 16 பிரதேச சபைகள் மேற்படி முறைமையை அமுல்ப்படுத்தாமல் புதிய மாற்று மென்பொருளைக் கொள்வனவு செய்திருந்தன.

**(II) சிவில் மற்றும் நீர் வழங்கல் செயற்திட்டங்கள்**

| இல. | விளைவற்ற சொத்துக்கள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| ----- | ---------------- | ------------- | --------------------------------------- | ----------------------- |
| (அ) | வனாத்தவில்லுவவிலுள்ள நீர் வழங்கல் முறைமை. | பிரதேசத்தில் உள்ள 4,333 குடும்பங்களுக்கு நீர் வழங்கல் வசதிகள் எதுவும் காணப்படவில்லை. | இணங்கப்பட்டவாறு பிரதேச சபை அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுத்திருந்தது. | பயனாளிகளுக்கு வசதிகளினை வழங்கும் பொருட்டு செயற்திட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | ரெதீகமவிலுள்ள பலநோக்கு கட்டிடம் மற்றும் பஸ்தரிப்பு நிலையம் | குறித்துரைக்கப்பட்ட நோக்கங்கள் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் கீழ் அனைத்து நிர்மாண வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் பிரதேச சபையால் இணங்கப்பட்ட நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்த பின்னர் பொதுமக்களிற்காக திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | மாவத்தகமவிலுள்ள பஸ் தரிப்பு நிலையம். | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொது மக்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | மாவத்தகமவில் நிர்மாணிக்கப்பட்ட பஸ் தரிப்பு நிலையம் அதன் செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கவில்லை. | நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களினைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பொல்பிட்டிகமவிலுள்ள நீர் வழங்கல் முறைமை. | பிரதேசத்தில் காணப்படும் 1700 குடும்பங்களுக்கு எவ்வித நீர் வழங்கல் வசதிகளும் காணப்படாமை. | பொல்பிட்டிகம திட்டத்திற்காக தண்ணீர் பவுசரை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | மீகஹகியுலவிலுள்ள பஸ் தரிப்பு நிலையம் | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொதுமக்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | நுழைவு வீதியினை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | பஸ் தரிப்பு நிலையத்தினைப் பயன்படுத்தும் பொருட்டு நுழைவு வீதியினை நிர்மாணிப்பதற்கு பிரதேச சபைக்கு உதவி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | பண்டாரவல பிரதேச சபையின் வாராந்த சந்தை, பலநோக்குக் கட்டிடம், மலசலகூடங்கள் மற்றும் நீர் வழங்கல் முறைமை. | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொதுமக்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | கட்டிட நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் தாமதமின்றி செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சு பிரதேச சபையை பணித்திருந்தது. குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களிற்காக இக் கட்டிடங்களை பயன்படுத்துவது உரிய அதிகாரிகளின் பொறுப்பாகும். | குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக கட்டிடத்தினைப் பயன்படுத்துவதற்கும் ஏனைய அபிவிருத்தி வேலைகளுக்கும் தேவைப்படும் வசதிகளினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | இரத்தோட்டை பிரதேச சபையின் வாராந்த சந்தை | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொதுமக்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | விற்பனையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் பிரகாரம் கடையினை உப பிரிவிடுவதற்கு பிரதேச சபை தீர்மானித்திருந்தது. கடைகளின் உப பிரிவிடுதல் பூர்த்தியடைந்ததும் வாராந்த சந்தை அதன் செயற்பாடுகளை ஆரம்பிக்கும். | குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக கட்டிடத்தினைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | கிரமவிலுள்ள பஸ் தரிப்பு நிலையம் | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொதுமக்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | பஸ் தரிப்பு நிலையத்திற்கான இரண்டு நுழைவு வீதிகளினை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பஸ் தரிப்பு நிலையத்தினைப் பயன்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | வில்கமுவவிலுள்ள மயானம் | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொதுமக்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | கட்டிட நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் தாமதமின்றி செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சு பிரதேச சபையை பணித்திருந்தது. அத்துடன் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களிற்காக இக் கட்டிடங்களை பயன்படுத்துவது உரிய அதிகாரிகளின் பொறுப்பாகும். | வில்கமுவ பிரசேத்தில் மயான நிர்மாண தேவைப்பாடு முறையாக மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் செயற்திட்டத்தினால் வழங்கப்பட்ட நிதிகள் வீணாக்கப்படுதல் தவிர்க்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஒ) | வில்கமுவவிலுள்ள நீர் வழங்கல் திட்டம். | பிரதேசத்தில் காணப்படும் 350 குடும்பங்களுக்கு நீர் வழங்கல் வசதிகள் காணப்படவில்லை. | சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நிபுணர்களிடம் ஆலோசனைகளினைப் பெற்றுக்கொண்டு பிழைகளை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஓ) | டிக்லந்தவிலுள்ள நீர் வழங்கல் திட்டம் | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொதுமக்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் அறிவுறுத்தப்பட்டவாறு சுத்திகரிப்புப் பொறியை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களினை குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஔ) | சுகவாழ்வு நிலையம் - இபலோகம | குறித்துரைக்கப்பட்ட நலன்கள் பொதுமக்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | நீர் வழங்கல் முறைமையை பூர்த்தி செய்த பின்னர் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

## 3.5 ஆரம்பிக்கப்படாத செயற்திட்ட செயற்பாடுகள்

பின்வரும் உப செயற்திட்டங்கள் 2017 ஏப்ரலிற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் உப செயற்திட்டங்கள் 2020 யூன் 30 வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| இல. | செயற்பாடுகள் | மதிப்பிடப்பட்ட பெறுமதி | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா மில்லியன்** | | | |
| (அ) | தனமல்வில மற்றும் ஹம்பேகமுவ விநியோக முறைமைக்கான நீர் வழங்கல் திட்டம் | 1,270 | குறித்துரைக்கப்பட்ட தரப்பினர்களால் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நீர் வளம் போதாமை | உப செயற்திட்டம் இயன்றளவு விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டும் அல்லது செயற்திட்ட நிர்வாகக் கைநூலிலுள்ள வேலைப் பட்டியல்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | திருத்தப்பட வேண்டும். |
| (ஆ) | தனமல்வில மற்றும் ஹம்பேகமுவ திட்டத்திற்கான நீர் சுத்திகரிப்பு பொறி | 430 | குறித்துரைக்கப்பட்ட தரப்பினர்களால் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நீர் வளம் போதாமை | உப செயற்திட்டம் இயன்றளவு விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டும் அல்லது செயற்திட்ட நிர்வாகக் கைநூலிலுள்ள வேலைப் பட்டியல்கள் திருத்தப்பட வேண்டும். |
| (இ) | கருவளகஸ்வெவவிலுள்ள நீர் வழங்கல் திட்ட நிர்மாணம் | 275 | - மேற்படி - | வழங்கப்பட வேண்டும் | - மேற்படி - |
| (ஈ) | கெபித்திகொல்லேவவிலுள்ள மூன்று நீர் வழங்கல் திட்டம் | 70 | - மேற்படி - | ஒரு செயற்திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (உ) | Borehale pump house chlorinators இன் நிர்மாணம் - மத்திய மாகாணம் (மூன்று எண்ணிக்கைகள்) | 60 | - மேற்படி - | கருத்துரை வழங்கப்படவில்லை. | - மேற்படி - |
| (ஊ) | தனமல்வில மற்றும் ஹம்பேகமுவ திட்டத்திற்கான உள்ளீர்ப்பு தாங்கி | 100 | - மேற்படி - | நீர் வளம் போதாமை | - மேற்படி - |
| (எ) | கொட்டகலவில் பிரதேச சபை கட்டிட நிர்மாணம் | 50 | - மேற்படி - | தேசிய வழிகாட்டல் குழுவால் அறிவுறுத்தப்பட்டவாறு காணிப் பிரச்சனை காரணமாக கைவிட்டமை | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஏ) | ஆர்கரபதனவில் பிரதேச சபை கட்டிட நிர்மாணம் | 50 | - மேற்படி - | தேசிய வழிகாட்டல் குழுவால் அறிவுறுத்தப்பட்டவாறு காணிப் பிரச்சனை காரணமாக கைவிட்டமை | - மேற்படி - |
| (ஐ) | பதலயாய மற்றும் பெலகன்வெவவிலுள்ள தண்ணீர் சுத்திகரிப்புப் பொறியின் விஸ்தரிப்பு | 389 | - மேற்படி - | வழங்கப்பட வேண்டும் | - மேற்படி - |
| (ஒ) | பஸ்ஸர நீர் வழங்கல் செயற்திட்டம் | 434.71 | - மேற்படி - | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஓ) | பலநோக்கு கட்டிட நிர்மாணம் | 50 | குறித்துரைக்கப்பட்ட தரப்பினர்களால் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வழங்குவதற்காக ADB அங்கீகாரத்தை எதிர்பார்த்திருத்தல். | உப செயற்திட்டம் இயன்றளவு விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டும் அல்லது செயற்திட்ட நிர்வாகக் கைநூலிலுள்ள வேலைப் பட்டியல்கள் திருத்தப்பட வேண்டும். |

**3.6 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| அவுஸ்திரேலியன் பிறைவேட் கம்பனியொன்றுடன் 2018 திசெம்பர் 15 இல் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையொன்றின் கீழ் ஏழு மாகாணங்களில் உள்ள ஏழு பிரதேச சபைகளிற்கான உப செயற்திட்டமொன்று அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. ஆரம்ப செயற்திட்டமொன்றாக சொத்துக்கள் முகாமைத்துவ மென்பொருளை உருவாக்குவதே இவ் | செயற்திட்டத்தை இடைநிறுத்தும் கட்டத்தில் தொடரப்பட்ட ஆரம்ப செயற்திட்டம் பொது நிதியை வீணாக்குதலை | தேவையான தரத்தை முறையாக உறுதிப்படுத்தும் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரருக்கு தாக்கத்தை | ADB இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட செயற்திட்டத்தின் உரிமைக் கட்டளை மற்றும் பெறுகை அறிவித்தலிற்கான செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. |

உப செயற்திட்டத்தின் நோக்கமாகும். 2006 சனவரி 25 ஆம் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை முகவர் சுற்றறிக்கை மூலம் வேண்டப்பட்ட பெறுகை நடைமுறைகளின்றி இவ் ஒப்பந்தத்திற்காக வெளிநாட்டு தனியார் கம்பனி தெரிவு செய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மேற்படி மென்பொருளின் உதவி மற்றும் பராமரிப்பு முறைமைக்காக மேற்படி உடன்படிக்கையில் எந்தவொரு ஏற்பாடும் காணப்படாதமை மேலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் இலங்கையின் உள்ளூராட்சி துறையில் ஏற்கனவேயுள்ள பிரமாணங்கள் மற்றும் கைநூல்களை ஆய்வு செய்வதன் ஊடாக எந்தவொரு சாத்தியவள ஆய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேற்படி உடன்படிக்கையிலுள்ள வேலைத்திட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகளை நிறுவுதல் மற்றும் ‘‘பயிற்சி மூலப்பொருளை அபிவிருத்தி செய்து பதவியணியினர் பயிற்சியை பூர்த்தி செய்தல்’’ என்பன 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திட்டமிடப்பட்டவாறு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

விளைவித்திருந்தது.

ஏற்படுத்துவதற்கு செயற்திட்டம் தேவைப்படுகின்றது.